# விலைக்கேள்விக்கான கோரல்(2023/01)

## கட்டடங்கள் திணைக்களம்,வடமாகாணம், யாழ்ப்பாணம்

1. வடமாகாண கட்டடங்கள் திணைக்களம் சார்பாக பிரதம செயலாளர் பெறுகைக்குழுவின் - (Major) தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Bidding Data & Contract Data (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -01)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்குமாகாணம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-222 2632, தொலைநகல் 021-222 2632) இம் முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மாகாணப்பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடக்குமாகாணம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-222 8091, தொலைநகல் 021-221 2700) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியான 2023-09-27 முதல் 2023-10-18 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத தொகையான ரூபா 25,000.00 யினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், பிரதம செயலாளர் பெறுகைக்குழு - (Major) , கட்டடங்கள் திணைக்களம், வடக்குமாகாணம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மாகாணப்பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடக்குமாகாணம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 2023-10-06 அன்று பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கேள்விஆவணம் வழங்கும்/பெற்றுக்கொள்ளும் காலம் | | | 2023-09-27 முதல் 2023-10-18 வரை | | | | |
| | விலைக்கேள்விக்குமுன்னரான கூட்டம் | | | 2023-10-06 அன்று பி.ப 2.30 | | | | |
| | கேள்வி மூடுதல்/திறத்தல் | | | 2023-10-19 அன்று மு.ப 10.30 | | | | |
| கேள்விஅடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை(ரூ. மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | நிதி | கேள்விப் பிணைவிபரம் | | |
| | | | | | | தொகை (ரூ) | தேவைப்படும் காலம். | |
| CBG/NP/B/JA/01/2023 | Construction of Three Storeyed Office Building for Department of Buildings, Northern Province at Jaffna (Stage III) | 130.00 | 450 Days | C4 or C3 (Buildings) | CBG | 1,300,000.00 | Till 2024.02.15 | |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். அத்துடன் இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பனவும் பின்பற்றப்படும்

தவிசாளர்
பிரதம செயலாளர் பெறுகைக்குழு -Major
கட்டடங்கள் திணைக்களம், வ.மா
கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்